DINATHANTHI 16 MAR 2007





கோவையில் விவசாயிகள் மாநாட்டில் சத்குரு ஜக்கி வாசுதேவ் பேசியபோது எடுத்த படம். சி.பி.ஐ. முன்னாள் இயக்குனர் டி.ஆர்.கார்த்திகேயன், டி.எஸ்.பிரபுராஜா, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இயக்குனர் எம்.என்.கந்தசாமி, கோ.நம்மாழ்வார், முன்னாள் எம்.எல்.ஏ. துரைமுருகன் ஆகியோர் அருகில் உள்ளனர்.

### கூடுதல் நன்மைகளை ஏற்படுத்தும் வகையில்

# 'விவசாய வழிமுறைகளை மாற்றி அமைக்க வேண்டும்'

## சத்குரு ஜக்கிவாசுதேவ் பேச்சு

கோவை,மார்ச்.16- விவசாயிகளுக்கு கூடுதல் நன்மைகளை ஏற்படுத்தும் வகையில் விவசாய வழிமுறைகளை மாற்றி அமைக்க வேண்டும் என்று சத்குரு ஜக்கிவாசுதேவ் கூறினார்.

### விவசாயிகள் மாநாடு

தேசிய விவசாயிகள் விழிப்புணர்வு இயக்கமான(நாம்) சார்பில் கோவையில் விவசாயிகள் எழுச்சி மாநாடு திருச்சி ரோடு ஆண்டாள் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்த மாநாட்டுக்கு நாம் அமைப்பின் மாநில தலைவர் டி.எஸ்.பிரபு ராஜா தலைமை தாங்கினார்.

ஈஷா யோகா மைய தலைவர் சத்குரு ஜக்கிவாசுதேவ் இந்த மாநாட்டில் கலந்துகொண்டு பேசும்போது கூறியதாவது:-

### செலவை குறைக்க வேண்டும்

என்னுடைய நோக்கம் விவசாயிகளின் உற்பத்தி செலவை குறைக்க வேண்டும் என்பதுதான். இதனை சரிப்படுத்தினால்தான் எதிர்காலத்தில் விவசாயத்துறையில் உள்ள சவால்களை சமாளிக்க முடியும். விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களுக்கு சரியான விலை கிடைக்காமலும், வழிகாட்டுதல் இல்லாமலும் பாதிக்கப்படுகிறார்கள். உற்பத்தி செய்யும் விளைபொருட்களை அனுப்பி வைக்க சரியான போக்குவரத்து ஏற்பாடு, சந்தை வசதி இல்லாமலும், சேமித்து வைக்க சரியான வசதி கிடைக்காமலும் திணறி வருகிறார்கள்.

ஒரு விளைபொருளுக்கு அதிக விலை கிடைக்கிறது என்பதற்காக அனைவரும் அதே விளை பொருளை விளைவிக்கிறார்கள். இதனால் உற்பத்தி அதிகமாகி கூடுதல் விலை கிடைக்காமல் சிரமத்துக்கு ஆளாகிறார்கள். தகவல் தொழில்நுட்பத்தில் எப்படியோ நாம் முன்னேறி உள்ளோம். இது தற்செயலாக நடைபெற்றது. அதே நேரம் விவசாயத்தில் நாம் பின்தங்கி உள்ளோம்.

### விவசாய வழிமுறைகள்

நம்நாட்டில் உள்ள 100 கோடி மக்கள் தொகையில் 30 கோடி பேருக்கு சரியான சாப்பாடு கிடைப்பது இல்லை. இதனை போக்க நாம் அனைவரும் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாய வழிமுறைகளை மாற்றி அமைக்க வேண்டும். குறைவான விவசாய தொழிலாளர்களை கொண்டு அதிக அளவில் உற்பத்தி செய்யும் வல்லமையை பெற வேண்டும். இதற்கான திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு லிட்டர் பாலை 7 ரூபாய்க்கு கொள்முதல் செய்கிறார்கள். அதே நேரம் ஒரு லிட்டர் தண்ணீர் 13 ரூபாய்க்கு விற்கிறார்கள். இதுபோன்ற ஏற்றத்தாழ்வுகள் களையப்பட வேண்டும். அதற்காக எதிர்மறையான போக்கை கையாளக்கூடாது. அதுவும் ஆபத்தை கொடுக்கும். இப்போது அதிகாரம், அரசியல் தலைவர்களின் கையில் உள்ளது. இன்னும் 10 அல்லது 15 ஆண்டுகளுக்குள் பொருளாதார தலைவர்களின் கையில் அதிகாரம் போய்சேரும். ஒருவர் ரோட்டை மறைத்தாலும், தண்ணீரின் போக்கை தடுத்தாலும் தலைவர் ஆகிவிடுகிறார்கள்.

விவசாயத்தில் புதிய தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

உருளை கிழங்கு கிலோ ரூ.16 முதல் 20 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டால், விவசாயிக்கு 6 ரூபாய்தான் கிடைக்கிறது. அதே நேரம் ஐரோப்பா போன்ற வெளிநாடுகளில் உருளை கிழங்கு கிலோ 100 முதல் 150 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. எனவே இங்குள்ள விவசாயிகள் உற்பத்தியாகும் பொருட்களை பக்குவப்படுத்தி சர்வதேச அளவில் ஏற்றுமதி செய்து லாபம் ஈட்ட வேண்டும். மேலும் எந்த நேரத்தில் எந்த பயிரை பயிரிட வேண்டும், அதனை எப்படி சந்தைப்படுத்த வேண்டும் என்பன போன்ற அடிப்படை அனுபவ அறிவை ஒவ்வொரு விவசாயியும் வளர்த்துக்கொள்ள வேண்டும். இதற்காக ஈஷா யோக மையம் ஒவ்வொரு பகுதியிலும் விவசாயிகளுக்கு விளக்க மையங்களை ஏற்படுத்தி வருகிறது. விவசாயிகள் முன்னேறினால்தான் நாடு முன்னேறும். இதனால் நாம் இதில் கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு சத்குரு ஜக்கிவாசுதேவ் கூறினார்.




கோவையில் 'நாம்' அமைப்பின் சார்பில் விவசாயிகள் எழுச்சி மாநாட்டை அமைப்பின் தேசிய தலைவர் கார்த்திகேயன் துவக்கி வைத்தார். அருகில், ஈஷா யோக மைய நிறுவனர் ஜக்கிவாசுதேவ், 'நாம்' அமைப்பின் மாநில தலைவர் பிரபுராஜா உட்பட பலர் உள்ளனர்.

DINAMANI 16 MAR 2007

# விவசாய விளைபொருள் கொள்முதல் கழகம் தொடங்க வேண்டும்

## அரசுக்கு 'நாம்' இயக்கம் கோரிக்கை

கோவை, மார்ச் 16: விவசாய விளைபொருள்களுக்கு கட்டுப்படியாகும் விலை கிடைக்க விவசாய விளைபொருள் கொள்முதல் கழகத்தை அரசு தொடங்க வேண்டும் என தேசிய விவசாயிகள் விழிப்புணர்வு இயக்கம் (நாம்) கோரிக்கை விடுத்துள்ளது.

இயக்கத்தின் மாவட்ட விவசாயிகள் மாநாடு கோவையில் வியாழக்கிழமை நடைபெற்றது. இயக்கத்தின் மாநிலத் தலைவர் டி.எஸ்.பிரபுராஜா தலைமை வகித்தார். தேசியத் தலைவர் டி.ஆர்.கார்த்திகேயன், ஈஷா யோகா மைய நிறுவனர் ஜக்கி வாசுதேவ் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.



மாநாட்டில் பங்கேற்ற (வலமிருந்து) 'நாம்' இயக்க தேசியத் தலைவர் டி.ஆர்.கார்த்திகேயன், ஈஷா யோகா மைய நிறுவனர் ஜக்கி வாசுதேவ், 'நாம்' இயக்க தமிழகத் தலைவர் டி.எஸ்.பிரபுராஜா.

விவசாய விளைபொருள்களுக்கு கட்டுப்படியாகும் விலை கிடைக்க விவசாய விளைபொருள் கொள்முதல் கழகத்தை அரசே தொடங்க வேண்டும். விவசாயத்துக்காக தனியாக நிதி நிலை அறிக்கையை தயாரிக்க வேண்டும். நதிநீர் இணைப்புத் திட்டத்தில், தமிழக நதிகளை முதலில் இணைக்க வேண்டும். பின்னர் தென்னிந்திய நதிகளை இணைக்க வேண்டும்.

மழை நீரைத் தேக்க அனைத்துப் பகுதிகளிலும் பண்ணை குட்டைகளை அமைக்க வேண்டும். பூரண மதுவிலக்கை அமல்படுத்தாத நிலையில், சுதேசி பானமான கள் இறக்க அனுமதிக்க வேண்டும். விவசாய நிலங்களில் மின் கம்பங்கள், கோபுரங்கள் அமைக்கும் போது, ஏற்படும் பாதிப்புக்கு இழப்பீட்டை வழங்கிய பின்னர் கோபுரங்கள் அமைக்கும் பணியைத் தொடங்க வேண்டும்.

கரும்புக்கு டன்னுக்கு ரூ.1,500 ஆதார விலை அளிக்க வேண்டும். நவீன கருவிகள் வாங்க அனைத்து விவசாயிகளுக்கும் 75 சத மானியம் கொடுக்க வேண்டும். வேளாண்மைக்கான மின்சாரத்தை பகல் நேரங்களில் மட்டுமே அளிக்க வேண்டும்.

கிராமங்கள் தோறும் விவசாய ஆலோசனை மையங்கள் அமைக்க வேணடும். தேசிய வங்கிகள் கொடுத்த வேளாண்மைக் கடனையும் தள்ளுபடி செய்ய வேண்டும்.

அத்திக்கடவு-அவிநாசி நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டதை துரிதமாக நிறைவேற்ற வேண்டும். ஈஷா யோகா மையத்துடன் இணைந்து மக்கள் பணிகளை தேசிய விவசாயிகள் விழுப்புணர்வு இயக்கம் செய்யும்.

விவசாயிகள் நிலங்களை கையகப்படுத்தும்போது, அவற்றுக்கு சந்தை விலையில் இழப்பீடு அளிக்க வேண்டும் என்பன உள்ளிட்டத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

DINAMALAR 15 MAR 2007

# கோவையில் இன்று விவசாயிகள் மாநாடு

## 'நாம்' இயக்கம் ஏற்பாடு

மேட்டுப்பாளையம், மார்ச் 15 -

கோவையில் நடைபெறும் விவசாயிகள் எழுச்சி மாநாட்டிற்கு அனைத்து விவசாயிகளும் வரும்படி 'நாம்' தேசிய விவசாயிகள் விழிப்புணர்வு இயக்கத்தின் மாவட்ட அமைப்பாளர் ராஜ்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கோவை ராமநாதபுரம், ஸ்ரீ ஆண்டாம் கல்யாண மண்டபத்தில் 'நாம் தேசிய விவசாயிகள் விழிப்புணர்வு இயக்கத்தின்' சார்பில் விவசாயிகள் எழுச்சி மாநாடு இன்று நடக்கிறது.

'நாம்' இயக்கத்தின் கோவை மாவட்ட அமைப்பாளர் ராஜ்குமார் கூறியதாவது:

இந்த மாநாட்டிற்கு முன்னாள் சி.பி.ஐ., இயக்குனரும், 'நாம்' இயக்கத்தின் தலைவருமான கார்த்திகேயன், மாநில தலைவர் பிரபு ராஜா, ஈஷா யோகா மைய தலைவர் ஜக்கி வாசுதேவ், இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார், நீரியல் நிபுணர் டாக்டர் சிவனப்பன் உட்பட வேளாண்மை வல்லுநர்கள் கலந்து கொள்கின்றனர்.

இந்த மாநாட்டில் தேசிய வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடன்களை அறவே ரத்து செய்ய வேண்டும். கள் இறக்கி விற்பனை செய்ய விவசாயிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும். கரும்பு விலை டன்னுக்கு ரூ. இரண்டாயிரமாகவும், பால் விலை லிட்டருக்கு குறைந்தது ரூ. 16 ஆக உயர்த்த வேண்டும். அத்திக்கடவு, அவிநாசி குளம், குட்டைகளுக்கு நீர் நிரப்ப துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். பவானி ஆற்று நீரை பயன்படுத்தும் விவசாயிகளுக்கு விதிக்கப்படும் தண்டத்தீர்வை உடனடியாக ரத்து செய்து, நிரந்தர உரிமை வழங்கப்பட வேண்டும், என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகள் மாநாட்டில் முன் வைத்து பேசப்படுகிறது. எனவே இந்த விவசாயிகள் எழுச்சி மாநாட்டில் அனைத்து விவசாயிகளும் கலந்து கொண்டு பயன்பெறும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு ராஜ்குமார் கூறினார்.